# <u>சார்பு நீதிமன்றம். திருவள்ளூர்</u>

இந்த நீதிமன்ற எழுத்தர் திரு.சங்கர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி–பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1973=ஆம் ஆண்டின் 10 வது சட்டத்தில் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| **அசல் வழக்கு எண். 38/2015** | நாள் – 05.08.2026 | வா.சா. 1 |
| பெயர் – முருகன் | வயது –45 | ஊர் –பட்டரை பெரும்புதூர் |
| த.பெ.–முனுசாமி | தொழில் –கூலி | |

## <u>பிரதிவாதி 3,4,5 தரப்பு குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

எந்த இடத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண். 504/7, 1168/20 பட்டா எண். 17. அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 ¼ சென்ட். தாவா இடத்தின் நீள, அகலம் தெரியுமா என்றால் 40 அடி நீளம், 60 அடி அகலம். தாவா இடத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். வடக்கில் தெரு, தெற்கில் கஜபதி என்பவரின் வீடு, கிழக்கில் தெரு, மேற்கில் நரசிம்மலு நாயுடுவின் காலி மனை. நான் மேலே குறிப்பிட்டுள்ள நீள அகலம் கொண்ட சர்வே எண்ணில் உள்ள நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட இடத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாங்கிய கிரையப் பத்திரமான வாதசாஆ.6 ல் நான் மேலே குறிப்பிட்டு சொன்ன அளவுகளும் 4 எல்லைகளும் அதில் குறிப்பிட்டப் படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாங்கிய வாதசா.6

கிரையப் பத்திரம் யாரிடம் இருந்து நான் வாங்கினேன் என்றால் நாராயணசாமி மகன் ஆறுமுகம் என்பவரிடம் இருந்து வாங்கினேன். அவர் வாங்கிய கிரையப் பத்திரமாக நான் தாக்கல் செய்துள்ள வாதசா.3 கிரையப் பத்திரத்தில் 1824 சதுரடி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த ஆறுமுகம் 1824 சதுர அடி மட்டுமே கிரையம் வாங்கி உள்ளார் எண்னும் போது எவ்வாறு எனக்கு 2313 சதுர அடிகள் கிரையம் கொடுக்க முடியும் என்று சொன்னால் ஆறுமுகம் என்னிடம் காலி மனை கூடுதலாக உள்ளது அதையும் நீ சேர்த்து அனுபவித்து கொள்ளலாம் என கூறினார். அவரது கிரையப் பத்திரமான வாதசா.3 லும் எனது கிரையப் பத்திரமான வாதசா.6 லும் காலி மனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் கூரை வீடு என்றும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல வாதசா.3 மற்றும் 6 கிரையப் பத்திரங்களில் காலி இடம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் கூரைவீடு என்று எங்குமே குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் கூரை வீட்டை காலி செய்து கொடுத்தார். ஆறுமுகத்திற்கு தாவா இடம் எவ்வாறு கிடைத்தது என்றால் கௌசல்யா என்பவரிடம் இருந்து ஆறுமுகம் வாங்கினார். கௌசல்யாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அவரது கணவர் ரங்கசாமி நாயுடு கௌசல்யாவிற்கு எழுதிக் கொடுத்தார். எந்த தேதி மற்றும் நாளில் ரங்கசாமி நாயுடு எழுதிக்

கொடுத்தார் என்பதற்கான பத்திரம் ஏதேனும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் ரங்கசாமி நாயுடு கௌசல்யாவிற்கு இடத்தை எழுதிக் கொடுத்தார் என சொல்கிறேன் என்றால் அவர்களுக்கு குழந்தைகள் இல்லை.அதனால் ரங்கசாமிநாயுடு கௌசல்யாவிற்கு எழுதிக் கொடுத்தார். கௌசல்யா சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் கஷ்டப்பட்டதால் ஆறுமுகத்திற்கு விற்பனை செய்தார். ஆறுமுகம் கௌசல்யாவிற்கு என்ன உறவு என்றால் உறவினர் அல்ல வெளிநபர். ரங்க சாமி நாயுடுவிற்கு தாவா இடம் எப்படி கிடைத்தது என்றால் கிருஷ்ணசாமி செட்டியார் என்பவரிடம் ரங்கசாமி நாயுடு கிரையம் வாங்கினார். எந்த வருடம் வாங்கினார் என்று தெரியாது. நான் மேலே சொன்ன விவரம் எனக்கு நான் தாக்கல் செய்த கிரையப் பத்திரங்களின் அடிப்படையில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் பிரதிவாதி கிருஷ்ணனும், ரங்கசாமியும் சகோதரர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உரிமையாளர் யார் என வழக்கில் யாரைச் சொல்லி உள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிருஷ்ணன் மற்றும் ரங்கசாமியின் அப்பா ராகவநாயுடு தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதசா.1 கிரையப் பத்திரம் முத்திரைத்தாள் ராகவல்நாயுடு பெயரில் தான் வாங்கப்பட்டுள்ளது என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. வாதசா.1 கிரையப் பத்திரம் ரங்கசாமி பெயரில் இருந்தாலும் அது அவரது தகப்பனார் ராகவலு நாயுடுவின் பொதுக்குடும்ப சொத்தின் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ரங்கசாமிக்கும் கிருஷ்ணனுக்கும் ஊரில் வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை அவர்கள் எவ்வாறு பிரித்துக் கொண்டார்கள் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரங்கசாமி நாயுடு இறந்த பிறகு கௌசல்யாவும் கிருஷ்ணனும் தான் சொத்துக்களை பார்த்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை ஒட்டி கிருஷ்ணனின் வீடு உள்ளது என்றால் இல்லை. கௌசல்யா வீடு உள்ளது.

(குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-M. Jagadheesan.,
Subordinate Judge,
Thiruvallur